

தருமபுரி மேற்கு மாவட்டம் பிக்கனஹள்ளியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாநில விவசாய அணி துணை செயலாளர் கூடப்பட்டி.சுப்பிரமணி ஏற்பாட்டில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ – மாணவிகள் 105 பேருக்கு தலா ரூ.1000 ஊக்கப்பரிசினை மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் எம்வீடி.கோபால், பி.கே.அன்பழகன், எஸ்.முனியப்பன், மாநில நிர்வாகி அரியப்பன், மாவட்ட நிர்வாகி முருகன், மற்றும் முனுசாமி, பெரியசாமி, நஞ்சுண்டன், பழனிமுத்து, சின்னசாமி, சிவராஜ், சூர்யா, இராஜபார்ட் ரங்கதுரை, அருள் பிரகாஷ், கவுன்சிலர் கார்த்திகேயன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

# கழக மகளிர் அணி - மகளிர் தொண்டரணி ஆலோசனைக் கூட்டம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி, தலைமை! ஹெலன் டேவிட்சன் – நாமக்கல் ராணி அறிக்கை!

சென்னை, ஜூன் 13-

நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளை முன்னிட்டு கழகத்துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் தலைமையில் தி.மு.க. மாநில,மாவட்ட,மாநகர மகளிரணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது என கழக மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

தி.மு.க.வின் வெல்லும் தமிழ் பெண்கள் திராவிட மாடல் அரசின் தேர்தல் வெற்றிக்காக தமிழ்நாட்டின் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் சிறப்பாக பணியாற்றி இருந்த நிலையில் கடந்த 5 ஆண்டுகளில் எல்லோருக்கும் எல்லாம் என சாதனைகள் படைத்த நம் திராவிட மாடல் அரசு எப்படி வெற்றி வாய்ப்பை இழந்தது என்று அத்தனைப்பேருக்கும் அதிர்ச்சியும்,வேதனையும்ஏற்படுத்தியுள்ளது.

இதிலிருந்து மீண்டு நம்மை பலப்படுத்திக் கொள்ளவும்,பல வெற்றி தோல்விகளைக் கண்ட நம் கழகத் தலைவர் நம்மோடு இருக்கிறார் .மீண்டு எழுவோம்!சரித்திரம் படைப்போம் !

நடத்து முடிந்த தேர்தல் முடிவுகளை முன்னிட்டு ஆலோசனைக் கூட்டம் இன்று (13/06/2026 சனிக்கிழமை) காலை 10 மணிக்கு கலைஞர் அரங்கம், சென்னையில் கழகத் துணைப்பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் தலைமையில் நடைபெற இருக்கிறது.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்கள்.

தி.மு.க. மாநில, மாவட்ட, மாநகர மகளிரணி மகளிர் தொண்டரணி, தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பா ளர்கள், வலைதள நிர்வாகிகள் அனைவரும் ஆலேசனைக் கூட்டத்தில் தவராது கலந்துகொள்ள அழைக்கிறோம். இவ்வாறு மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ப. இராணி ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

### மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னிலை! எஸ். ராஜசேகர் தலைமை!

# துறைமுகம் கிழக்கு பகுதி சார்பில் கலைஞர் புத்தெழுச்சி நாள் புகழரங்கம்!

## எ.வ.வேலு எம்.எல்.ஏ. – ஜவாஹிருல்லா – ஊடகவியலாளர் செந்தில்வேல் வாழ்த்துரை!

சென்னை, ஜூன் 13-

சென்னை கிழக்கு மாவட்ட தி-மு-க- சார்பில், துறைமுகம் கிழக்கு பகுதி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்தநாள்- புத்தெழுச்சி நாள்விழாவை முன்னிட்டு "புத்தெழுச்சி-15", "அறிவு சமூகத்தை வளர்த்தவர்! அன்பின் கதிர் போல் உதித்த வர்!!எனும் தலைப்பில், மாபெரும் புகழ ரங்கம் நல திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (13/06/2026-சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில், சென்னை, மண்ணடி, தம்பு செட்டி தெருவில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் துறைமுக கிழக்கு பகுதி கழகச் செயலாளர் எஸ். ராஜசேகர் தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., பகுதி செயலாளர்கள் எஸ் முரளி, தொகுதி பார்வையாளர் இரா. நரேந்திரன், எம் விஜயகுமார், ஜி மகாதேவன்,,பி. ஸ்ரீராமுலு, இசட் ஆசாத் என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, ஆர் கலைச் செல்வி, எம்.இப்ராஹிம் கனி, பா.ஜெகதீஷ், பி.விஜயகுமார், எம்.விநாயகம், பா.பிரதீப் குமார், எல்.சம்பத் குமார், நா.ரஞ்சித் விஜயாலயன், வெ.பரிமளம் எம் சி எல் நவீன்.எம்.சி, ராஜேஷ் ஜெயின் எம் சி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, சே.தமிழ்வாணன், வி.சந்தான லட்சுமி, சி.பா. ஜெயராமன், மே. ஜனார்த்தனன், கே.ஆர்.அபரஞ்சி, மா. முத்துக்குமார், எல்.சத்திய நாராயணன், எஸ் புகழேந்தி, ஆர் ஏ.அஸ்லாம், டி கதிரவன் (எ) ராஜா, ம. பரத் குமார், டி.சதீஷ்குமார், வே.பா.பிரபாகரன், மா ஜெய்சங்கர், பா கதிரவன், ஆர் ரவிச்சந்திரன், ஜி ராமமூர்த்தி பா.அண்ணாதுரை,

இம்மாபெரும் புகழரங்கத்தில் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எ.வ.வேலு எம்.எல்.ஏ. மனிதநேய மக்கள் கட்சி தலைவர் பேராசிரியர்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. ஊடகவியலாளர் செந்தில்வேல் ஆகியோர் வாழ்த்துரைகின்றனர்.

மேலும் இப்பொதுக் கூட்டத்தில், மேயர் பிரியா ராஜன், தயாநிதி மாறன் எம்பி, மாநில நிர்வாகிகள் கே.எஸ்.இரவிச்சந்திரன் தமிழன் பிரசன்னா, கார்த்திக் மோகன், டாக்டர்.ஏ.பி. பூர்ணிமா எம் சி கே.சந்துரு சி. மகேஷ்குமார், சங்கரிநாராயணன் எஸ்.மணிமுடி வே.உமாகாந்த் கே.எஸ். எம்.நாதன் பரிதிஇளம்சுருதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

இறுதியில் வட்ட கழக செயலாளர்கள் ஆ.நா. பார்த்திபன் க.கவியரசு ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

# பெண்ணிற்கு பாலியல் தொல்லை - த.வெ.க. நிர்வாகி மீது வழக்கு!

## த.வெ.க. ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை!

சென்னை, ஜூன் 13 -

சென்னை ஆலந்தூரில் பெண் உடற்பயிற்சி மையப் பொறுப்பாளருக்கு த.வெ.க. நிர்வாகி பாலியல் தொல்லை அளித்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை ஆலந்தூரில் பெண் ஒருவர் தனியார் உடற்பயிற்சி மையத்தில் பொறுப்பாளராக பணியாற்றி வருகிறார். அதே பகுதியைச் சேர்ந்த ஆலந்தூர் வடக்கு பகுதி த.வெ.க. செயலாளர் வேம்புலி என்பவர், அப்பெண்ணை அடிக்கடி தொல்லை செய்து வந்ததுள்ளார்.

ஒரு கட்டத்தில் வேலையைவிட்டு நீக்க வைப்பேன் என வேம்புலி மிரட்டி, வீடு புகுந்து பாலியல் தொந்தரவும் அளித்தாக தெரிகிறது. இதனை தொடர்ந்து அப்பெண் பரங்கிமலை காவல்நிலையத்தில் புகார் அளித்த நிலையில், ஆலந்தூர் வடக்கு பகுதி த.வெ.க. செயலாளர் வேம்புலி மீது காவல்துறையினர், வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர்.

த.வெ.க. நிர்வாகி பெண்ணிற்கு பாலியல் தொந்தரவு அளித்த தகவல் வெளியான உடன், பிரச்சினை பெரிதாவதற்குள் அவரை கட்சியில் இருந்து நீக்குவதாக த.வெ.க அறிவித்துள்ளது.

ஸ்ரீவைகுண்டம் தொடர்ந்து தமிழ்நாட்டின் பல்வேறு பகுதி களில் பெண்களுக்கு பாலியல் தொல்லை அளித்து த.வெ.க நிர்வாகிகள் சிக்குவது, த.வெ.க ஆட்சியில் த.வெ.கவினரால் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதை நிருபனமாகியுள்ளதாக நெட்டிசன்கள் விமர்சனம் செய்து வருகின்றனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றியம் வேப்பூர் அரசு நடுநிலைப்பள்ளி மாணவ – மாணவியர்களுக்கு இந்திய சமூக ஆய்வு மையம் மற்றும் விஜயபாஸ்கர் அறக்கட்டளை இணைந்து வெளியிட்ட "தமிழ்நாடு தந்த அண்ணா!, ஏன்? என்று கேட்க சொன்னவர், ஒரு குருகுலத்தின் கதை" உள்ளிட்ட பகுத்தறிவு படக்கதை நூல்களை 100 தொகுப்புகளை நல்லூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் வ. குணசேகரன் வழங்கினார். உடன் ஒன்றிய பொறியாளர் அணி துணை அமைப்பாளர் வெ.செல்வரசன் வேப்பூர் இளைஞர் அணி நிர்வாகிகள் சபரிநாதன், மாரிமுத்து, கேஷவ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை வடக்கு ஒன்றியத்தில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்த வாக்காளர்களுக்கு தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளரும், திருவையாறு சட்டமன்ற உறுப்பினருமான துரை.சந்திரசேகரன் நன்றி தெரிவித்தார். தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் தஞ்சை து.செல்வம் மற்றும் ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### 'திராவிட மாடல்' ஆட்சியில் தொடங்கப்பட்ட

# 'வின்பாஸ்ட்' கார் தொழிற்சாலை ரூ.7,000 கோடியில் புதுப்பிப்பு!

## இ-ஸ்கூட்டர், இ-பஸ் உள்ளிட்டவற்றை தயாரிக்க உள்ளதாக தகவல்!

சென்னை, ஜூன் 13 -

திராவிட மாடல் ஆட்சியின் முயற்சியால் தூத்துக்குடியில் தொடங்கப்பட்ட வின்பாஸ்ட் மின்சார கார் தொழிற்சாலை, 7 ஆயிரம் கோடி ரூபாயில் புதுப்பிக்கப்பட உள்ளது.

இதன் மூலம் இஸ்கூட்டர், இபஸ் உள்ளிட்டவற்றை தயாரிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

வியட்நாமை சேர்ந்த முன்னணி மின்சார வாகன தயாரிப்பு நிறுவனமான வின்பாஸ்ட், திராவிட மாடல் ஆட்சியில், தூத்துக்குடியில் 114 ஏக்கர் பரப்பளவில் தொழிற்சாலையை தொடங்கியது.

இதனை அப்போதைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், 2025 ஆகஸ்ட் மாதம் தொடங்கி வைத்தார். உற்பத்தி தொடங்கிய சில மாதங்களிலேயே இந்த ஆலை 10 ஆயிரமாவது மின்சார காரை உற்பத்தி செய்து சாதனை படைத்தது. இந்நிலையில், இரண்டாம் கட்ட விரிவாக்க பணிகளை மேற்கொள்ள சுற்றுச்சூழல் அனுமதி கோரி அந்நிறுவனம் விண்ணப்பித்துள்ளது.

இந்த விரிவாக்கத்தின் மூலம், கார்களை மட்டுமே தயாரித்து வந்த வின்பாஸ்ட் நிறுவனம், மின்சார ஸ்கூட்டர்கள் மற்றும் மின்சார பேருந்துகளையும் தயாரிக்கும் வகையில் மாபெரும் ஒருங்கிணைந்த உற்பத்தி மையமாக மாறவுள்ளது.

### அவிநாசி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அன்னூர் அருகே

# குளத்தில் மண் அள்ளியதை தட்டிக்கேட்ட விவசாயிகளை மிரட்டிய த.வெ.க.வினர்!

## கண்டு கொள்ளாத அரசு அதிகாரிகள்!

திருப்பூர். ஜூன் 13-

திருப்பூர் மாவட்டம், அவிநாசி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அன்னூர் அருகே குளத்தில் அனுமதியின்றி சிலர் மண் அள்ளியதை தட்டிக்கேட்ட விவசாயிகளை த.வெ.க. வினர் மிரட்டிய நிலையில் அதனை தாசில்தார் உள்பட அரசு அதிகாரிகள் கண்டு கொள்ளாமல் விலகி நின்றது அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அன்னூர் தாலுகாவில் 41 குளம், குட்டைகளில் வண்டல் மண் எடுக்க வருவாய்த் துறை அதிகாரிகள் அனுமதி வழங்கினர். இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக கஞ்சப்பள்ளியில் 45 ஏக்கர் பரப்பளவு கொண்ட தொட்டையன் குளத்தில் விதிமுறைகளை மீறி வண்டல் மண்ணை தாண்டி, கிராவல் மண் எடுக்கப்பட்டது. இதையடுத்து ஆவேசம் அடைந்த அப்பகுதி மக்கள் அங்கு மண் எடுத்த பொக்லைன் இயந்திரம், டிராக்டர், டிப்பர் லாரியை சூழ்ந்து, ஆர்டர் இருக்கிறதா என கேட்டு முற்றுகையிட்டு வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து அவர்கள் இயந்திரங்களுடன் டிப்பர் லாரி மற்றும் டிராக்டர்களை எடுத்து தப்பிச் சென்றனர். சட்ட விரோதமாக விதியை மீறி மண் எடுத்த லாரிகள், டிராக்டர்கள் தப்பிச் சென்ற பிறகு வருவாய்த்துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்தனர். அன்னூர் தாசில்தார் ஜெய பாரதி, ஆர்.ஐ குருநாதன், கனிமவளத் துறை உதவி புவியியலாளர், காவலர் அழகேசன், தனிப் பிரிவு ஏட்டு கருணாகரன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்தனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், கடந்த தி.மு.க. ஆட்சியில் விவசாயிகளுக்கு மட்டும் வண்டல் மட்டுமே எடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதுவும் அதிகாரிகள் முன்னிலையில் தான் எடுக்க வேண்டும் என்ற உத்தரவு இருந்தது. ஆனால் தற்போது டிராக்டர்களில் மண் எடுக்க விவசாயிகள் பெற்ற ஆன்லைன் அனுமதிச்சீட்டை பயன்படுத்தி மற்றவர்களும் டிப்பர் லாரியில் மண் எடுத்து வருகின்றனர். விதிகளை மீறி மண் எடுத்த லாரி உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். வழக்குப் பதிவு செய்ய வேண்டும். வாகனங்களை பறிமுதல் செய்ய வேண்டும் என்றனர்.

சம்பவ இடத்திற்கு வந்த த.வெ.க. வடக்கு ஒன்றிய செயலாளர் விஜய் மற்றும் த.வெ.க.வினர் தாசில்தார் ஜெயபாரதியுடன் பேசிக் கொண்டிருந்த விவசாயிகளை இடைமறித்து பல்வேறு கேள்விகளை கேட்டனர். பல்வேறு பகுதிகளில் இதுபோல நடந்து வருகின்றனர். விவசாயிகளிடம் த.வெ.க. வினர் மாறி மாறி கேள்விகளை கேட்ட சமயத்தில் நடுவில் மாட்டிக் கொண்ட ஆர்.ஐ குருநாதன் என்ன செய்வதென தெரியாமல் திகைத்தார். இதனை தள்ளி நின்று அன்னூர் தாசில்தார் ஜெயபாரதி வேடிக்கை பார்த்தார்.

தொடர்ந்து, வருவாய்த் துறை அதிகாரிகள் குளத்தில் மண் எடுக்க தடை விதிக்கப் படுகிறது. இந்த குளத்தில் அதிக அளவில் வண்டல் மண் இல்லை. விதிமீறலில் ஈடுபட்ட லாரி உள்ளிட்ட அனைத்து வாகனங்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தனர். இதையடுத்து பொதுமக்கள் கலைந்து சென்றனர்.

# நிதி இல்லாததால் பேரூராட்சிகள் முடங்கும் அபாயம்!

சென்னை, ஜூன் 13 -

தமிழ்நாடு முழுவதும் பேரூராட்சிகளுக்கு மாநில அரசு வழங்க வேண்டிய நிதி வழங்கப்படாததால் குடிநீர், மின் கட்டணம் செலுத்த முடியாமல் நிதி நெருக்கடியில் பேரூராட்சிகள் சிக்கித் தவித்து வருகின்றன.

தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 479 பேரூராட்சிகள் உள்ளன. ஒவ்வொரு பேரூராட்சிக்கும் மக்கள் தொகை அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 10 லட்சம் ரூபாயும், மக்கள்தொகை அதிமுள்ள பேரூராட்சிகளுக்கு அதற்கு அதிகமாகவும் நிதி வரவு வைக்கப்படும்.

புதிய அரசு பொறுப்பேற்று ஒரு மாதத்திற்கு மேலாகியும் இன்னமும் நிதி வராத காரணத்தால் தமிழகம் முழுவதும் பேரூராட்சிகளில் அடிப்படை பணிகள் முடங்கிக் கிடக்கிறது.

இந்த நிதியை வைத்து தான் பணியாளர்களின் சம்பளம், தெருவிளக்குகளுக்கு மின் கட்டணம், பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும்.

குடிநீருக்கு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணம் உள்ளிட்டவற்றிற்கு செலவு செய்யப்படுவது வழக்கம். பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்பில் உள்ள, அத்தியாவசிய பணிகளை செயல்படுத்த வேண்டிய துறைகளுக்கு நிதித் துறையில் இருந்து நிதி பகிர்வு அளிக்கப்படாத நிலையில் மற்ற துறைகளின் நிலை கேள்விக்குறியாகி உள்ளது.

இதே நிலை நீடித்தால் அரசு நிர்வாகம் முடங்கிப் போகும் என அதிகாரிகள் கவலை தெரிவித்தனர்.

# மானாமதுரை அரசு மருத்துவமனையில் த.வெ.க. பிரமுகர் குடிபோதையில் ரகளை!

சிவகங்கை, ஜூன் 13 -

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் அரசு மருத்துவமனை உள்ளது. இங்கு மானாமதுரை மற்றும் சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான வர்கள் சிகிச்சை பெற்று செல்கிறார்கள். மானாமதுரையைசேர்ந்த ராமசாமி என்பவர் ஏற்கனவே உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார் .

அவர் மருத்துவமனையில் குடிபோதையில் இருந்ததால் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார். பிறகு மீண்டும் சில தினங்களுக்கு முன் ராமசாமி உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம்11ம்தேதி அவரது நண்பரை மது வாங்கி வரச் சொல்லி மதுவை குடித்து விட்டு பெண்கள் வார்டு அருகில் ரகளை செய்து கொண்டிருந்தார். இதனால் அங்கிருந்த பெண் நோயாளிகள் குழந்தைகளுடன் இருந்தவர்கள் மிகவும் சிரமப்பட்டார் கள் .

இது பற்றி மருத்துவமனை நிர்வாகத்தில் இருந்து மானாமதுரை போலீசிற்கு தகவல் கிடைத்தது. மானாமதுரை போலீசார் ராமசாமியை எச்சரித்து தகராறு செய்தால் வழக்கு பதிவு செய்து விடுவோம் என்று கூறி எச்சரிக்கை செய்து வெளியே அனுப்பியிருக்கிறார்கள்.

இதுகுறித்து ராமசாமி மானாமதுரை எம்.எல்ஏ. அலுவலகத்தை தொடர்பு கொண்டு தனக்கு சிகிச்சை அளிக்காமல் வெளியே அனுப்புவதாக கூறியுள் ளார் . மானாமதுரை எம்.எல்.ஏ ஆபிசிலிருந்து சுகாதார இணை இயக்குனர் அலுவலகத்திற்கு சிகிச்சை பெறாமல் நோயாளி அனுப்புவதாக புகார் கூறினார்கள்.

இதுகுறித்துதொலைபேசியில் கேட்டதற்கு மானாமதுரை அரசு மருத்துவமனையிலிருந்து ராமசாமி மருத்துவமனையில் குடித்துவிட்டு நடந்து கொண்டவிதம் நோயாளிகளுக்கு ஏற்பட்ட துயரங்களை கூறியுள்ளார்கள்.

மேலும் மருத்துவர்கள் மருத்துவமனை ஊழியர்களை அவமரியாதையாக பேசியதையும் கூறினார்கள். இந்த நிலையில் த.வெ.க. பிரமுகர் மது போதை யில் அரசு மருத்துவமனையில் இவ்வாறு தகராறு செய்தது நோயாளிகளுக்கு மிகுந்த பயத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

இது குறித்து காவல்துறையினர் விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மருத்துவமனை ஊழியர்கள் அங்கிருந்த உள் நோயாளிகள் கூறினார்கள்.